# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

*************

## இந்தியாவின் புதிய நாடாளுமன்ற வளாகத்தை பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் நாட்டுக்கு அர்ப்பணித்தார்

இந்தியாவின் புதிய நாடாளுமன்ற வளாகத்தை பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 2023 மே 28 ஆம் திகதி நாட்டுக்கு அர்ப்பணித்தார். இச்சந்தர்ப்பத்தில் சக பிரஜைகளுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்து உரை நிகழ்த்திய பிரதமர், மே 28 ஆம் திகதியும் வரலாற்றில் அழியாத இடத்தைக்கொண்டிருக்கும் எனத்தெரிவித்தார். அத்துடன், “அமுதப் பெருவிழாவுக்காக இந்திய மக்கள் பாரிய பரிசொன்றையும் வழங்கியுள்ளனர்”, எனவும் அவர் குறிப்பிட்டார்.

02. நாடாளுமன்ற அவையின் இருக்கைகளின் நெருக்கம் மற்றும் தொழில்நுட்ப வசதிகளின் பற்றாக்குறை ஆகியவை காரணமாக பழைய நாடாளுமன்றத்தில் செயலாற்றுவதில் காணப்பட்ட சிக்கல்களைக் கவனத்தில் கொள்ளும்போது புதிய பாராளுமன்றம் இக்காலத்தின் அவசர தேவையாகும். தேசிய மலரான தாமரையை தொனிப்பொருளாகக் கொண்டு மாநிலங்களவையும், தேசிய பறவையான மயிலை தொனிப்பொருளாக கொண்டு மக்களவையும் உட்புற வடிவமைப்பைக் கொண்டிருக்கும் நிலையில், இக்கட்டடமானது நவீனத்தையும் புராதனத்தையும் ஒன்றாக பிணைக்கின்றது. அதுமட்டுமல்லாமல் இவ்வளாகத்தில் தேசிய மரமான ஆலமரமும் உள்ளமை இவற்றுக்கு மேலும் மெருகூட்டுகின்றது. இந்தக் கட்டடம், விராசத் (மரபு) மற்றும் வாஸ்து (கட்டிடக்கலை), கலா (கலை) மற்றும் கௌசல் (திறன்), சன்ஸ்கிருதி (கலாசாரம்) மற்றும் அரசியலமைப்பின் முக்கிய குறிப்புகள் ஆகிய சகல அமசங்களையும் கொண்டிருப்பதாக பிரதமர் மோடி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இப்புதிய கட்டடமானது நாட்டின் பல்வேறு பகுதிகளின் சிறப்புகளை உள்ளடக்கிய “ஏக் பாரத் ஷ்ரேஷ்டா பாரதவிங்கின் உணர்வை உள்ளடக்கிகாணப்படும், உதாரணமாக ராஜஸ்தானில் இருந்து கிரனைட், மகாராஷ்டிராவில் இருந்து மர உற்பத்திப் பொருட்கள் மற்றும் பதோயார் கலைஞர்களின் தரைவிரிப்பு ஆகியவை உள்வாங்கப்பட்டுள்ளமையை குறிப்பிடலாம். மேலும், புதிய நாடாளுமன்றத்தில் அதன் கட்டுமானத்திற்காக பணிபுரிந்த 60,000 தொழிலாளர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மாடமும் உள்ளமை இதன் மற்றொரு சிறப்பம்சமாகும்.

03. இது ஒரு கட்டிடம் மட்டுமல்ல, 1.4 பில்லியன் இந்தியர்களின் அபிலாஷைகள் மற்றும் கனவுகளின் பிரதிபலிப்பாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார். "இந்தியாவின் உறுதிப்பாட்டை உலகிற்கு எடுத்துரைக்கும் நமது ஜனநாயகத்தின் ஆலயமே இது”, என பிரதமர் மேலும் குறிப்பிட்டார். “இந்த புதிய நாடாளுமன்ற கட்டடம்

திட்டமிடலை யதார்த்தத்துடனும், கொள்கையை உணர்வுடனும், மன உறுதியை அமுலாக்கத்துடனும், உறுதிப்பாட்டை யதார்த்தத்துடனும் இணைக்கிறது”, என்றும் அவர் கூறினார்.

04. புதிய இந்தியா புதிய இலக்குகளை உணர்ந்து புதிய வழிகளை வகுத்து வருகிறது என சுட்டிக்காட்டிய பிரதமர், "புதிய பாதைகளில் பயணிப்பதன் மூலம் மட்டுமே புதிய மாதிரிகளை நிறுவ முடியும் எனவும் குறிப்பிட்டார். “ஒரு புதிய ஆற்றல், புதிய வைராக்கியம், புதிய உற்சாகம், புதிய சிந்தனை மற்றும் ஒரு புதிய பயணம் ஆகியவற்றுடன் புதிய தரிசனங்கள், புதிய திசைகள், புதிய தீர்மானங்கள் மற்றும் ஒரு புதிய நம்பிக்கையும் உள்ளது” என்றும் பிரதமர் மோடி அவர்கள் குறிப்பிட்டார். இந்தியாவின் உறுதியையும், குடிமக்களின் மன உறுதியினையும், இந்தியாவில் மனித வலுவின் பலத்தையும் உலகம் மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் நோக்குகிறது என்றும் பிரதமர் கூறினார். "இந்தியா முன்னேறும் போது, உலகம் முன்னேறும்" என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

05. ஜனநாயகத்தின் ஆலயமே நாடாளுமன்றமாகும் எனக் குறிப்பிட்ட பிரதமர் இந்தியா ஒரு ஜனநாயக நாடு மட்டுமல்ல, ஜனநாயகத்தின் தாயும் கூட என்றும், ஜனநாயகம் என்பது இந்தியாவில் நடைமுறையில் உள்ள ஒரு முறைமை மட்டுமல்ல, அது ஒரு கலாசாரம், சிந்தனை மற்றும் பாரம்பரியம் எனவும் வலியுறுத்திக் கூறினார். பல ஆண்டுகால அடிமைத்தனத்திற்குப் பிறகு, இந்தியா தனது பயணத்தை மீண்டும் தொடங்கி, இப்போது அம்ரித்காலை அடைந்துள்ளது, அதாவது இந்தியா சுதந்திரம் அடைந்த 100வது ஆண்டிற்கு இன்னும் 25 ஆண்டுகள் உள்ள காலப்பகுதியாகும். "அமிர்தகால் என்பது நமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் வளர்ச்சியின் புதிய பரிமாணங்களை உருவாக்கும் காலகட்டமாகும். அமிர்தகால் தேசத்திற்கு ஒரு புதிய திசையை வழங்கும்.”

06. நாடு அதன் வெற்றிமீது கொண்டிருக்கும் நம்பிக்கையினை புதிய நாடாளுமன்றக் கட்டடம் மேலும் வலுவாக்கும் அத்துடன் விக்சித் பாரதத்தை நோக்கிய பயணத்திற்காக அனைவரையும் ஊக்குவிக்கும் என்றும் பிரதமர் கூறினார். “தேசத்திற்கு முதலிடம் என்ற உணர்வோடு நாம் செல்லவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக எமது கடமைகளுக்கு நாம் முக்கியத்துவமளிக்க வேண்டும். நம்மைத் தொடர்ந்து மேம்படுத்தும் அதேவேளை நமது நடத்தை முன்மாதிரியானதாக இருக்க வேண்டும். அதேபோல நாங்கள் எங்கள் பாதையிலேயே பயணிக்கவேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டார்..

07. நாடாளுமன்றத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர், 1.4 பில்லியன் இந்தியர்களின் தீர்மானம்தான் நாடாளுமன்றத்தை புனிதப்படுத்துகிறது என்றார். இங்கு எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும் வரும் நூற்றாண்டுகளை அலங்கரித்து, எதிர்கால தலைமுறைகளுக்கு அதிகாரமளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ஏழைகள், தலித்துகள், பின்தங்கிய சமூகத்தினர், பழங்குடியினர், விசேட தேவையுடையோர் மற்றும் சமூகத்தின் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட குடும்பங்களினதும் மேம்பாட்டுக்கான பாதை, அதேபோல தாழ்த்தப்பட்டோரின் மேம்பாட்டிற்கான முன்னுரிமைக்குரிய செயற்பாடுகளுக்கு இந்த

நாடாளுமன்றத்தின் வழியாகச் அதிகாரமளிக்கப்படுமென பிரதமர் சுட்டிக் காட்டினார். புதிய வளமான, வலுவான மற்றும் அபிவிருத்தி அடைந்த இந்தியாவை உருவாக்க இந்த நாடாளுமன்றம் அடிப்படையாக அமையும்.

08. மக்களவைத் தலைவர் ஸ்ரீ ஓம் பிர்லா, மாநிலங்களவை துணை சபாநாயகர் ஸ்ரீ ஹரிவன்ஷ் நாராயண் சிங் உள்ளிட்ட ஏனைய பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

***

**கொழும்பு**
**31 மே 2023**